# *மாற்று அரசியல் பண்பாடு நோக்கி...*

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வுப் பின்னணி*

லொயோலா கல்லூரியின் ஊடக ஆய்வியல் புலத்தின் அங்கமான மக்கள் ஆய்வுக் குழு, கடந்த பல வருடங்களாக பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் அவர்களின் வழிநடத்துதலில், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தமிழக மக்களின் பண்பாட்டு-அரசியல் தளங்களில் நிகழ்ந்துவரும் ஒருங்கிணைந்த மாற்றங்களின் போக்குகளையும், அப் போக்குகளின் பின்னால் உறைந்துள்ள மாற்று அரசியல் பண்பாட்டுக்கான ஏக்கங்களையும் மாநில அளவிலான கள ஆய்வுகள் மூலம் தொடர்ந்து பதிவுசெய்து வருகிறது. கல்விநிலையப் பின்புலத்தில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகள் நூலகங்களில் நுடங்கிவிடாமல் மீண்டும் மக்களிடம் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்ற நோக்கத்தில், ஒவ்வொரு சுற்று ஆய்வுக்குப் பின்னும் ஊடகத்துறையினர் சந்திப்பு நடத்தப்படுகிறது. அத்துடன், வெறும் "கருத்துக் கணிப்பு" என்ற அளவில் களஆய்வு முடிவுகளைக் குறுக்கிவிடாமல், அம் முடிவுகளை ஆழமாக அலசிப் பார்க்கும் ஆய்வரங்குகளும் நடத்தப்படுகின்றன.

தற்போது தேர்தல் ஆணையம் தொகுதி மறுவரையறை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதையும், திமுக ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்துள்ளதையும் கவனத்தில் கொண்டு, தமிழக மக்கள் முன்வைக்க விரும்பும் தேர்தல் சீர்திருத்தங்களையும், ஓராண்டு ஆட்சி மற்றும் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளைக் குறித்த மதிப்பீட்டினையும் பதிவுசெய்ய, மாநில அளவிலான களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மே 3 முதல் 21 வரை இரு கட்டங்களாக நடைபெற்ற இந்த ஆய்வில் பேராசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், பல்துறை மாணவர்கள், கள உதவியாளர்கள் என 30-க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டனர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 3466 (முதல் கட்டம் 3164, இரண்டாம் கட்டம் 302) பேரிடம் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளது.

### *பங்கேற்றோர் பின்னணி*

களஆய்வில் பங்கேற்றோரில் 85.9 ஆண்கள். *வயதுரீதியாக*, 25 வயது வரை - 17.8, வயது 26 முதல் 35 வரை - 30.0, வயது 36 முதல் 45 வரை - 29.1 (மீதி - வயது 45-க்கு மேல்). பங்கேற்றோரில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கினர் (24.2) திருமணமாகாதவர்கள்.

*கல்வியைப்* பொருத்த மட்டில், பெரும்பாலோர் (58.7) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள் (வகுப்பு 5 வரை - 18.7, கலைசார் கல்லூரிக் கல்வி - 14.1, தொழில்சார் கல்லூரிக் கல்வி - 6.5, மீதி - பிறவகைப் படிப்புக்கள்).

*சாதிரீதியாக*, தாழ்த்தப்பட்டோர் - 20.5, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 21.1, பிற்படுத்தப் பட்டோர் - 46.5 (மீதி - பிற இனத்தினர் / சாதி தெரிவிக்காதோர்). *மதரீதியாக*, இந்து மதத்தினர் - 81.9, இஸ்லாமியர் - 7.3, கிறிஸ்தவர் - 6.7 (மீதி - பிற மதத்தினர் / தெரிவிக்காதோர்).

*தொழில்ரீதியாக*, கூலி/விவசாயிகள் - 25.7, சொந்தத் தொழில் செய்வோர் - 44.2, தனியார் நிறுவனத்தில் வேலை செய்வோர் - 14.0, அரசு ஊழியர் - 3.4, மீதி - வேலையற்றோர் / வேறு வேலைகள்).

## *தேர்தல் சீர்திருத்தங்கள்*

### *01. நல்ல அரசியல் கட்சி:*

ஒரு நல்ல அரசியல் கட்சியிடம் எதிர்பார்க்கப்படும் குணாம்சங்களாக மக்கள் குறிப்பிட்டுள்ளவற்றில் *முதல் ஐந்து* இடங்கள்: ஊழலுக்கு இடம் தராமை (35.5), சாதி-மத வேறுபாடு பார்க்காமை (29.1), படித்தவர்களுக்கு முக்கியத்துவம் தருதல் (11.0), குடும்ப அரசியலுக்கு அப்பாற்பட்டு இருத்தல் (9.4), கொள்கைப் பிடிப்பு உள்ளதாக இருத்தல் (4.3).

### *02. நல்ல அரசியல்வாதி:*

ஒரு நல்ல அரசியல்வாதியிடம் எதிர்பார்க்கப்படும் பண்புகளில் *முதல் ஐந்து* இடங்களில் வருபவை: மக்கள் நலனில் உண்மையான அக்கறை (51.4), எளிதாகப் பார்த்துப் பேசும் சூழல் (20.0), சாதி-மத-குடும்பப் பிணைப்புகளுக்கு அப்பாற்பட்டு இருப்பது (8.9), தனி வாழ்வில் ஒழுக்கமும் பொதுவாழ்வில் நேர்மையும் (5.7), எல்லாரையும் சமமாக மதித்து நடத்துவது (3.3).

### *03. நீங்கள் ஏன் தேர்தலில் நிற்கக் கூடாது?*

ஒரு நல்ல அரசியல்வாதியிடம் தாம் எதிர்பார்க்கும் பண்புகள் அனைத்தும் (27.9) அல்லது பெரும்பாலானவை (37.3) *தம்மிடம் இருப்பதாகப்* பரவலாகக் கருதும் நிலையில், தாமே நேரடியாகத் தேர்தலில் நிற்காமல் இருப்பதற்கு அவர்கள் சுட்டிக்காட்டும் காரணங்களில் முக்கியமானவை: அந்த அளவுக்குச் செலவுசெய்யப் பணபலம் இல்லை (36.4), நேரடி அரசியலில் எனக்கு ஆர்வமில்லை (26.3). பிற காரணங்களாக, போதிய அனுபவம் இல்லை (13.3), இந்தத் தொகுதியில் என் சாதியினர் குறைவு என்பதால் வெற்றிபெறும் வாய்ப்பில்லை (6.7), கட்சித் தலைமையிடம் பரிந்துரை செய்ய ஆள் இல்லை (3.9), சுயேட்சையாக நிற்கலாம் என்றால், பொதுவாக மக்கள் சுயேட்சை வேட்பாளரை ஆதரிப்பதில்லை (3.6) ஆகியவை இடம்பெறுகின்றன.

### *04. தேர்தல் நடக்கும் விதம்:*

தற்போது தேர்தல் நடக்கும் விதத்தின் முக்கிய பலவீனங்களாக, கள்ள ஓட்டுப் போடுவது (36.0), வாக்குகளை விலைக்கு வாங்குவது (33.9), வன்முறையில் இறங்கி வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது (8.8), தனக்கு வாக்களிக்குமாறு மிரட்டுவது (7.8), போலிவாக்காளர்களைத் திட்டமிட்டுப் பட்டியலில் சேர்ப்பது (5.2), வாக்களிக்க விடாமல் தடுப்பது (3.6) ஆகியவை இடம்பெறுகின்றன.

### *05. தேர்தல் அமைப்புமுறை (Electoral System):*

தற்போது நம் நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் அமைப்பு முறையே திருப்தியாக உள்ளதாகப் பெரும்பாலோர் (33.6) கருத்துத் தெரிவித்திருந்தாலும், ஏறத்தாழ அதே அளவினர் (32.8) இந்த அமைப்பு முறையில் மாற்றத்தை விரும்புகின்றனர். இது குறித்து அவ்வளவாகத் தெரியாது எனக் கணிசமானோர் (17.4) தெரிவித்திருப்பது தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குரியது.

### *06. நடுநிலை / எதிர்மறை வாக்கு:*

கடந்த தேர்தலின்போது சில ஏடுகளில் விவாதிக்கப்பட்ட நடுநிலை / எதிர்மறை வாக்கு (Conduct of Election Rules, விதி எண் 49-O) குறித்து, பெரும்பாலான மக்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர் (40.3). பிற கருத்துக்களில், இதற்கு உரிய முக்கியத்துவம் தராத வரையில் இதனால் எந்தப் பயனும் இல்லை (23.8), இது பற்றி சரியாகத் தெரியவில்லை (20.5), இதெல்லாம் நமது சூழலுக்கு ஒத்துவராது (13.2) ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

### *07. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் (Proportional Representation):*

உலகின் சில நாடுகளில் உள்ள விகிதாச்சாரத்திற்கேற்ற பிரதிநிதித்துவ முறை வரவேற்கத்தக்கது எனவும், இது நமது நாட்டிற்கு ஒத்துவராது எனவும் ஏறத்தாழச் சம அளவில் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது (வரவேற்கத் தக்கது - 37.4, ஒத்து வராது - 36.7). இது குறித்து எதுவும் தெரியாது என்போர் எண்ணிக்கையும் மிகக் கணிசமாக உள்ளது (22.1).

### *08. கண்டிப்பாக வாக்களிக்கச் சட்டம்:*

இந்தியக் குடிமகன்/ள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றுவதற்கு ஏகோபித்த வரவேற்பு உள்ளது (83.8). இப்படி ஒரு சட்டம் இயற்றப்பட்டால் அது

ஜனநாயக நெறிமுறைக்கே எதிரானதாகிவிடும் (8.2), சட்டத்தின் மூலம் வற்புறுத்தாமல், தானே முன்வந்து வாக்களிப்பதே சரியான அணுகுமுறையாக இருக்கும் (6.3) ஆகியவற்றுக்கும் சிறுபான்மை ஆதரவு வெளிப்படுகிறது.

***09. குற்றப் பின்னணி உள்ளவர்களுக்குத் தடை:***

இந்த விதியைத் தயவுதாட்சண்யம் பார்க்காமல் மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே அறுதிப் பெரும்பான்மைக் கருத்து (78.3). இதனால் வேண்டுமென்றே பொய் கேஸ் போடும் சாத்தியமுள்ளதால் இந்த விதியை நீக்கிவிட வேண்டும் (12.7), தேர்தல் என்றாலே வன்முறை என்றாகிவிட்ட சூழலில் இந்த விதிக்கு எந்த அர்த்தமும் இல்லை (6.9) ஆகிய பதில்களும் கவனிக்கத் தக்கவை.

***10. குறைந்த பட்ச படிப்புத் தகுதி:***

தேர்தலில் போட்டியிட குறைந்த பட்சக் கல்வித் தகுதியை நிர்ணயிப்பதற்கு எதிர்ப்பும் ஆதரவும் ஏறத்தாழச் சம அளவில் வெளிப்படுகின்றன (எதிர்ப்பு - 42.1, ஆதரவு - 40.7). படிப்புக்கும் பண்புக்கும் சம்பந்தமில்லை (8.7), அரசியலை மற்ற துறைகளுடன் ஒப்பிடக் கூடாது (7.5) ஆகியவை குறிப்பிடத்தக்க சிறுபான்மைக் கருத்துக்கள்.

***11. உச்சபட்ச வயது வரம்பு:***

மற்ற பணிகளுக்கு இருப்பதைப் போல தேர்தலில் போட்டியிடுவதற்கும் உச்ச வயதை நிர்ணயிப்பதற்குப் பலத்த வரவேற்புள்ளது (73.9). அரசியலை மற்ற துறைகளுடன் ஒப்பிடக் கூடாது (18.3), இது குறித்துத் தீர்க்கமாக எதையும் சொல்ல இயலவில்லை (6.4) ஆகியவை பிற பதில்கள்.

உச்சபட்ச வயதை நிர்ணயிப்பதை வரவேற்போரில் பெரும்பான்மையோர் (60.7) எழுபது வயதை உச்ச வரம்பாகப் பரிந்துரைக்கின்றனர் (65 வயது - 24.8, 60 வயது - 12.6, மீதி - 70க்கு மேல்).

***12. தொடர்ந்து இரு முறை மட்டுமே பதவி:***

சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இருமுறைக்குமேல் பதவிவகிக்கக் கூடாது என்ற கருத்தைப் பலரும் (71.6) வெளிப்படுத்தியுள்ளனர். நமது சூழலுக்கு இது ஒத்து வராது (22.3), இதனால் சில திறமையானவர்களை இழக்க நேரிடும் (5.2) ஆகியவை பிற முக்கியக் கருத்துக்கள்.

***13. தேர்தல் பிரச்சாரம்:***

தேர்தல் காலப் பிரச்சாரங்களை நெறிப்படுத்த மக்கள் முன்வைக்கும் பரிந்துரைகளில் முக்கியமானவை: வீடுவீடாகச் சென்று வாக்குச் சேகரிக்க மட்டும் அனுமதி - 44.6, கட்-அவுட், பேனர், போஸ்டர் முதலியவற்றுக்குத் தடை - 19.1, தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் மாநாடு, பேரணி, பொதுக்கூட்டங்களுக்குத் தடை - 12.1, ஒலிபெருக்கிகளுக்கு நிரந்தரத் தடை - 10.2, வானொலி/ தொலைக்காட்சியில் பேச மட்டும் அனுமதி - 8.0 (மீதி - பிற பரிந்துரைகள்).

***14. கட்சிசார்பில்லாத உள்ளாட்சி:***

உள்ளாட்சித் தேர்தல்களில் எந்தப் பதவிக்கும் கட்சிசார்பான போட்டி இருக்கக் கூடாது என்பதற்கு வலுவான ஆதரவு (57.8) வெளிப்படுகிறது. கடந்த தேர்தல் போலவே தொடரலாம் (14.1), முந்தைய அதிமுக ஆட்சியில் நடந்தது போல மாற்றியமைக்கலாம் (11.2), பெரும்பாலும் ஆளும் கட்சிக்கே ஆதரவாக அமைவதால் இந்தத் தேர்தலே தேவையில்லை (8.7), சட்டமன்றத் தேர்தலோடு உள்ளாட்சித் தேர்தலையும் நடத்திவிடலாம் (5.4) ஆகியவை பிற பதில்கள்.

***15. தொகுதி மறுவரையறை:***

தேர்தல் ஆணையம் தற்போது மேற்கொண்டுள்ள தொகுதி மறுவரையறை செய்யும் முயற்சி சிறப்பாக நடந்து வருவதாக மிகக் கணிசமானோர் (43.2) திருப்தி தெரிவித்தாலும், அதைவிட அதிகமாக அதிருப்திக் குரல் ஒலிக்கிறது (தற்போது முன்வைக்கப்படும் மாற்றங்கள் ஏற்கத் தக்கவையல்ல - 16.6, குறிப்பிட்ட சில சாதிகளின் பலத்தைக் குறைத்துக்காட்ட மேற்கொள்ளப்பட்டுள்ள சதி - 12.4, இப்போது இது தேவையற்ற வேலை - 11.1, ஆளுங்கட்சி/கூட்டணிக்குச் சாதகமாகத் தொகுதிகளை மாற்றி யமைக்கும் முயற்சி இது - 7.6).

மறுவரையறையால் தொகுதி அந்தஸ்தை இழக்க நேரிடும் பகுதிகளில் மிகக் கடுமையான அதிருப்தி நிலவுகிறது (திருப்தி - 21.4 மட்டுமே).

***16. தகவல் அறியும் உரிமைச் சட்டம்:***

அக்டோபர் 2005 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிக் கேள்விப் பட்டுள்ளோர் 28.0 மட்டுமே. அரசு/பொது நிறுவனங்களில் தகவல் பெறவேண்டிய தேவை தமக்கு இருப்பதாக 20.2 தெரிவித்தாலும், வெறும் 6.5 மட்டுமே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தித் தகவல்களைப் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளனர்.

## இளைய தமிழகம்

***17. சினிமா சித்திரிக்கும் கல்லூரி:***

இன்றையக் கல்லூரி மாணவர்கள் / இளைஞர்கள் சினிமா முதலிய ஊடகங்களில் சித்திரிக்கப் படுவது போலவே நிஜ வாழ்க்கையில் அவர்களுடைய நடத்தையும் இருப்பதாகப் பெரும்பாலோர் (43.5) கருதுகின்றனர் (சினிமா சித்திரிப்பு முற்றிலும் சரி - 22.3, சினிமாவில் கொஞ்சம் மிகைப்படுத்தல் இருந்தாலும் பெரும்பாலும் சரி - 21.2). எந்தச் சம்பந்தமும் இல்லை (31.4), ஓரளவுக்கு ஒத்துப்போகிறது (21.5) ஆகிய கருத்துக்களும் கவனத்திற்குரியவை.

***18. சமூக அக்கறை?***

இக்கால இளைஞர்கள் / கல்லூரி மாணவர்களில் ஒரு சிலரிடம் மட்டுமே சமூக அக்கறை உள்ளது என்பது பெரும்பான்மை (42.8) கருத்தாக இருந்தாலும், எல்லாரிடமும் அல்லது பெரும்பாலோரிடம் உள்ளதாகக் கணிசமானோர் (36.3) கருதுகின்றனர். யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்ற கருத்துக்கும் ஓரளவு (17.7) ஆதரவு வெளிப்படுகிறது.

***19. நேரடி அரசியல்?***

கல்லூரி மாணவர்கள் படிக்கின்ற காலத்தில் கட்சி அரசியலில் ஈடுபடுவது நல்லதல்ல எனக் கணிசமானோர் (39.0) வலியுறுத்துகின்றனர். எனினும், 18 வயதில் வாக்களிப்பதால், அரசியல் கட்சிகளைக் குறித்த விமர்சனப் பர்வையை வளர்த்துக் கொள்வது நல்லது (34.2), அரசியல் ஒரு சாக்கடை என்ற எண்ணத்தை மாற்றுவதற்கு படிக்கும்போதே அரசியல் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வது அவசியம் (18.6) ஆகிய கருத்துக்களும் அழுத்தமாக முன்வைக்கப்படுகின்றன.

***20. படித்தவர்களும் அரசியலும்:***

படித்து முடித்த இளைஞர்கள் பெரும்பாலும் அரசியலை விட்டு ஒதுங்கிவிடக் காரணமாக அமைந்துள்ளவற்றில் முதல் ஐந்து: அரசியலில் வன்முறை அதிகம், உயிருக்குப் பாதுகாப்பில்லை - 21.7, இங்கு பணமே பிரதானம், திறமைக்கு மதிப்பில்லை - 21.6, எல்லாக் கட்சிகளிலும் முதியவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் - 20.4, அரசியலை விடப் பிற துறைகளில் அதிகம் சம்பாதிக்கலாம் - 19.7, குடும்ப/சாதி அரசியலை மீறி எந்தக் கட்சியுமில்லை - 9.1.

## ஊடக நுகர்வு

***21. பிடித்த நடிகர்:***

தற்போது களத்தில் இருக்கும் நடிகர்களில் தமிழக மக்களுக்குப் பிடித்த ஹீரோ-களில் ரஜினிகாந்தும் ஹீரோயின்-களில் திரிஷாவும் முதலிடத்தில் இருக்கின்றனர். வில்லன் நடிகர்களில் பிரகாஷ் ராஜும் நகைச்சுவை நடிகர்களில் வடிவேலுவும் முதலிடம் பெறுகின்றனர். முதல் ஐந்து இடங்களில் இருப்போரைக் குறித்த விவரம்:

***பிடித்த கதாநாயக நடிகர்கள்:***

| | |
|---|---|
| 01. ரஜினிகாந்த் | 23.4 |
| 02. விஜய் | 12.0 |
| 03. விஜயகாந்த் | 10.2 |
| 04. கமல் | 8.5 |
| 05. அஜித் | 6.1 |

***பிடித்த கதாநாயகி நடிகைகள்:***

| | |
|---|---|
| 01. திரிஷா | 18.5 |
| 02. ஜோதிகா | 16.8 |
| 03. அஸின் | 15.1 |
| 04. சிநேகா | 11.9 |
| 05. பிரியாமணி | 8.2 |

| ***பிடித்த நகைச்சுவை நடிகர்கள்:*** | | ***பிடித்த வில்லன் நடிகர்கள்:*** | |
|---|---|---|---|
| 01. வடிவேல் | 31.4 | 01. பிரகாஷ்ராஜ் | 41.5 |
| 02. விவேக் | 20.1 | 02. ஆஷிஷ் வித்யார்த்தி | 21.6 |
| 03. கஞ்சா கருப்பு | 12.6 | 03. பசுபதி | 14.7 |
| 04. கருணாஸ் | 8.3 | 04. ரகுவரன் | 11.1 |
| 05. சார்லி | 6.7 | 05. ஆனந்தராஜ் | 8.3 |

***22. நடிகர்களின் அரசியல் ஈடுபாடு:***

*ரஜினிகாந்தைப் பொருத்த வரை,* அவர் கண்டிப்பாக அரசியலுக்கு வருவார் என மிகச் சிலரே (17.5) ஊகிக்கின்றனர். *சரத்குமாரைப் பொருத்த வரை,* அவர் தனிக் கட்சி தொடங்குவார் என ஊகிப்போர் 35.6 (நாடார் அமைப்புக்களின் ஆதரவோடு - 19.2, ரசிகர்களின் ஆதரவோடு - 16.4). அவர் கட்சி தொடங்குவது சந்தேகமே (30.0), தொடங்கினாலும் அவரால் கட்சியை நடத்த முடியாது (28.3) ஆகியவை குறிப்பிடத்தக்க பிற ஊகங்கள்.

***23. திரையரங்கக் கட்டணம்:***

திரையரங்கக் கட்டணத்தை நிர்ணயித்து அரசு ஆணை பிறப்பித்துப் பல மாதங்களாகிவிட்ட போதிலும், கட்டணம் குறைந்துள்ளதாகத் தெரியவில்லை என்பதே பெரும்பான்மை (52.4) கருத்தாக வெளிப்பட, இது குறித்துப் பாராட்டுத் தெரிவிப்போர் 21.9 மட்டுமே. பிற பதில்களில், சினிமா பெரும்புள்ளிகளின் நிர்ப்பந்தத்திற்கு அரசு பணிந்துவிடக் கூடும் என்ற சந்தேகம் உள்ளது (8.8), கட்டணம் நிர்ணயம் செய்யும் உரிமையைத் திரையரங்க உரிமையாளரிடமே விட்டுவிடவேண்டும் (7.5) ஆகியவை கவனிக்கத் தக்கவை.

***24. கேபிள் டி.வி.:***

கேபிள் டி.வி.யை அரசுடைமையாக்குவது மக்களுக்குப் பயனுள்ளது என்பதால், இந்தக் கோரிக்கையை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் என்பதே பெருவாரியானோரின் (62.6) கருத்தாக உள்ளது. அரசுடைமை ஆக்காமலேயே கேபிள் டி.வி. தொழிலை ஒழுங்குபடுத்த முடியும் (17.0), எந்தத் தொழிலையும் அரசுடைமையாக்கத் தேவையில்லை (14.3) ஆகியவை பிற முக்கியக் கருத்துக்கள்.

## ***பண்பாட்டுக் கூறுகள்***

***25. கலப்புத் திருமணம்:***

சாதிவிட்டுச் சாதி கலப்புத் திருமணம் செய்வதற்குப் *பெருவாரியான ஆதரவு* வெளிப்படுகிறது.

எந்தச் சாதியாய் இருந்தாலும் சம்மதம் - 65.2

கலப்புத் திருமணத்தை ஆதரிக்கவில்லை - 18.0

(பிற பதில்கள்: தம் சாதிக்கு இணையான அல்லது உயர்ந்த சாதி என்றால் மட்டும் - 7.2, தம் சாதியின் உள் பிரிவு என்றால் மட்டும் - 6.3).

கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதாகப் பெரும்பாலோர் கூறினாலும் தங்கள் குடும்பத்தில் இத்தகைய திருமணம் நடந்துள்ளதாகத் தெரிவிப்போர் 24.0 மட்டுமே என்பது கவனிக்கத்தக்கது.

***26. இடஒதுக்கீட்டில் "க்ரீமி லேயர்":***

சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டில் வசதியானோரை (creamy layer) *சேர்க்கக்கூடாது என்போர்* - 39.1, சேர்க்க வேண்டும் என்போர் - 35.3. எஸ்.ஸி./எஸ்.டி. தவிர்த்த பிற சாதிகளில் வேண்டுமானால் வசதியானோரைத் தவிர்த்துவிடலாம் என்ற கருத்தும் குறிப்பிடத்தக்க அளவில் (17.8) முன்வைக்கப்பட்டுள்ளது.

***27. இடைக்காலத் தடை:***

அரசு உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு (OBC) 27% ஒதுக்கீடு செய்வதற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்பது பெரும்பான்மைக் கருத்தாக வெளிப்பட்டுள்ளது.

தடை விதித்தது ஏற்கத்தக்கதல்ல - 54.8

தடைவிதித்தது முற்றிலும் சரி - 25.3

போதுமான சான்றுகளை அரசு சமர்ப்பிக்கத் தவறியதன் விளைவு - 12.3

நீதிமன்றத் தடையைப் பெரும்பாலோர் ஏற்காவிட்டாலும், தமிழக அரசு சார்பில் நடத்தப்பட்ட ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு எதிரான மனப்போக்கே பரவலாக உள்ளது (போராட்டத்திற்கு எதிர்ப்பு - 69.5, ஆதரவு - 24.7, மீதி - கருத்துக் கூற விருப்பமில்லை).

### *28. தனிப் பாலினமாக அரவாணிகள்?*

அரவாணிகளைத் தனியான மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கவேண்டும் என்ற கருத்துக்கு ஏகோபித்த ஆதரவு (72.8) உள்ளது. தனிப் பாலினமாக அல்லாமல் பெண்களாக அங்கீகரிக்கலாம் (12.5), இப்படி அங்கீகரிப்பது ஒழுக்கக் கேட்டிற்கே வழிவகுக்கும் (10.7) ஆகியவை குறிப்பிடத்தக்க பிற பதில்கள்.

## *ஓராண்டு அரசியல்*

### *29. திமுக அரசின் ஓராண்டுச் சாதனைகள்:*

கடந்த ஓராண்டு அளவாகத் திமுக ஆட்சி மேற்கொண்ட பன்முகச் செயல்பாடுகளில் தமிழக மக்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்று, முதல் ஐந்து இடங்களில் இருப்பவை:

கிலோ ரூ.2-க்கு ரேஷன் அரிசி வழங்கி வருவது - 42.6
கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைத் தக்கவைத்திருப்பது - 19.0
சத்துணவில் கூடுதல் முட்டை வழங்குவது - 16.9
வண்ணத் தொலைக்காட்சி வழங்கி வருவது - 9.1
பொறியியல்/மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வை ரத்துசெய்தது - 7.3

### *30. திமுக அரசின் ஓராண்டுச் சறுக்கல்கள்:*

திமுக அரசின் ஓராண்டுச் செயல்பாடுகளில் நேர்ந்துள்ள சறுக்கல்களாக மக்கள் கருதுபவற்றில் முதல் ஐந்து:

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாதது - 52.7
நதிநீர்ப் பிரச்சனைகளில் எந்தத் தீர்வும் எட்டாதது - 20.4
எல்லாத் துறைகளிலும் மலிந்துவரும் லஞ்சம்/ஊழல் - 11.3
சட்டம்-ஒழுங்கைக் காப்பதில் மெத்தனம் - 6.5
சில்லறை வணிகர்களுக்கு எதிரான போக்கு - 5.8

### *31. ஊரின் அவசரத் தேவை / பிரச்சனை:*

தங்கள் ஊரில் / பகுதியில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய அவசரத் தேவை / பிரச்சனையாக மக்கள் சுட்டிக்காட்டுபவற்றில் முதல் ஐந்து:

குடிதண்ணீர் வசதி இல்லை - 34.1
கழிப்பிட வசதி இல்லை - 25.3
சாலை/பஸ் வசதி இல்லை - 17.9
மருத்துவ/சுகாதார வசதி இல்லை - 7.6
மின்விநியோகம் சரியில்லை - 5.2

### *32. ஓராண்டு திமுக ஆட்சியும் அதிமுக அரசியலும்:*

கடந்த ஒரு வருடமாக திமுக ஆட்சி நடத்திய விதத்தையும், பிரதான எதிர்க்கட்சியாக அதிமுக செயலாற்றிய விதத்தையும் குறித்த மக்களின் ஒட்டுமொத்த மதிப்பீடு:

| ஒரு வருடமாக... | நன்று | குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| ஆட்சியில் திமுக | 58.9 | 26.4 | 14.7 |
| எதிர்க்கட்சியாய் அதிமுக | 46.9 | 35.4 | 17.7 |

***33. திமுக தலைவரும் அதிமுக தலைவியும்:***

கடந்த ஓராண்டு திமுக ஆட்சி மற்றும் முந்தைய அதிமுக ஆட்சி நடந்த விதங்களின் பின்னணியில், திமுக தலைவர் கருணாநிதியையும் அதிமுக தலைவர் ஜெயலலிதாவையும் ஒப்பிட்டு மக்கள் முன்வைக்கும் மதிப்பீடு:

| பண்புநலன் | கருணாநிதி | ஜெயலலிதா |
|---|---|---|
| தாமதிக்காமல் விரைந்து முடிவெடுப்பது | 45.6 | 53.3 |
| எடுத்த முடிவில் கடைசிவரை உறுதியாக நிற்பது | 47.9 | 48.7 |
| சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது | 42.3 | 50.7 |
| ஏழை எளியோர் மீது கரிசனை காட்டுவது | 49.3 | 45.1 |
| கூட்டணியை அனுசரித்துப் போவது | 51.5 | 44.9 |
| கட்சியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது | 44.6 | 50.0 |
| உள்கட்சி ஜனநாயகத்தைப் பேணுவது | 43.0 | 48.0 |
| குடும்ப ஆதிக்கத்திற்கு இடம் தராமல் இருப்பது | 30.3 | 53.6 |
| சமயோசிதமாக, நிதானமாகச் செயல்படுவது | 48.2 | 45.2 |
| கொள்கை அடிப்படையில் செயல்படுவது | 44.5 | 43.1 |

*(ஒப்பீட்டு மதிப்பெண்கள் புள்ளிகளில் தரப்பட்டுள்ளன)*

***34. திமுக அரசின் நிலைதிறன்:***

கூட்டணிக் கட்சிகள் “வெளியிலிருந்து” தரும் ஆதரவுடன் இப்போதுள்ளபடியே திமுக அரசு *மீதமுள்ள நான்காண்டுகளும் நீடித்துச் சிறப்பாகச் செயல்படும்* எனப் பாதிக்கும் சற்றுக் குறைவானோர் (48.6) கருதுகின்றனர். *கூட்டணிக் கட்சிகளையும் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டால் தடுமாற்றமின்றிச் செயல்பட முடியும்* என்ற கருத்தும் வலுவாகவே (29.9) முன்வைக்கப்படுகிறது. தற்போதைய விரிசல் தீவிரமடைந்தால், நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்ந்து சட்டமன்றத்திற்கும் தேர்தல் வரலாம் (9.5), விரைவில் திமுக கூட்டணி உடைந்து, ஆட்சி கவிழும் (7.3) ஆகியவை சிறுபான்மைக் கருத்துக்கள்.

## ***சமீபத்திய நிகழ்வுகள்***

***35. நாளிதழ் அலுவலகத்தின் மீது தாக்குதல்:***

சமீபத்தில் மதுரையில் தினகரன் அலுவலகத்தின் மீது நடந்த தாக்குதல் குறித்து இரண்டு முக்கியக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பத்திரிக்கை சுதந்திரத்திற்கு எதிரான தாக்குதல் - 49.3

இரு குடும்பங்களுக்கு இடையிலான அதிகார மோதலின் வெளிப்பாடு - 40.5

***36. தயாநிதி மாறன் விலகல்:***

தயாநிதி மாறன் மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ததைக் குறித்து மக்கள் வெளிப்படுத்திய எண்ணங்களில் முக்கியமான மூன்று:

உள்கட்சிப் பிரச்சனையால் ஒரு துடிப்பான அமைச்சரை நாடு இழந்துவிட்டது - 33.1

ஒரு குடும்பப் பிரச்சனையை இந்த அளவு அரசியலாக்கி இருக்கத் தேவையில்லை - 31.8

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதால் அவர் பதவி விலகியது சரியே - 25.0

***37. திமுக-வுக்குள் விரிசலா?***

சமீபத்திய நிகழ்வுகளின் பின்னணியில், திமுக கட்சிக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளதா என்பதை ஒட்டிய மக்களின் கணிப்பு:

பெரிதாக விரிசலெதுவும் ஏற்பட்டு விடவில்லை - 38.5

விரிசல் ஏற்பட்டுள்ளது, அது இனி குறைய வாய்ப்பில்லை - 23.0

விரைவிலேயே திமுக கட்சி சிதறினாலும் வியப்பதற்கில்லை - 31.8

***38. திமுக-வின் செல்வாக்குச் சரிவு:***

சமீபத்திய நிகழ்வுகளால், மக்கள் மத்தியில் திமுக-வின் செல்வாக்கு எந்த அளவில் உள்ளது என்பது குறித்துத் தெரிவிக்கப்பட்ட மூன்று வலுவான கருத்துக்கள்:

திமுக-வின் செல்வாக்கில் எந்தச் சரிவுமில்லை - 31.8

அனைத்துத் தரப்பிலும் மிகக் கடுமையான சரிவு - 39.9

நடுநிலை வாக்காளர்கள் மத்தியில் அவநம்பிக்கை உருவாகத் தொடங்கியுள்ளது - 25.7

***39. கருத்துக் கணிப்பு அவசியமா?***

சமீபத்திய நிகழ்வுகளின் பின்னணியில், கருத்துக் கணிப்புகள் நடத்தப்படலாமா என்பதற்கு எதிர்ப்பை விட ஆதரவே அதிகமாகப் பதிவாகியுள்ளது.

இதனால் பிரச்சனைகள் அதிகமாவதால், கணிப்புகளுக்கு ஒட்டுமொத்தமாகத் தடை - 17.6

அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்படும் கணிப்புகளுக்கு மட்டும் தடை - 6.8

கருத்துச் சுதந்திரத்தின் ஓரம்சம் என்பதால் வரவேற்கக்கூடியதே - 30.4

மக்கள் மனப்போக்கை அறிந்துகொள்ள உதவுவதால் தடைசெய்யக்கூடாது - 35.1

## ***வாக்கு யாருக்கு?***

கடந்த ஓராண்டு திமுக ஆட்சியின் பின்னணியில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், மக்களுடைய வாக்குகள் பிரியும் விதம்:

| திமுக | அதிமுக | தேமுதிக |
|---|---|---|
| 31.8 | 27.6 | 15.2 |

(பிற கட்சிகளில்: காங்கிரஸ் - 3.7, இடதுசாரிகள் - 2.2, பாமக - 3.5, மதிமுக - 1.4, யாருக்கும் வாக்கு இல்லை - 7.8, இப்போது சொல்ல இயலாது - 4.5, மீதி - ஏனைய கட்சிகள்).

திமுக ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட கடந்த (நவம்பர்-டிசம்பர் 2006) ஆய்வு முடிவுகளோடு ஒப்பிடுகையில், *திமுக மற்றும் தேமுதிக-வின் வாக்கு வங்கிகளில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.*

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
25 மே 2007

***குறிப்பு:***

01. மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.

02. பெரும்பாலான கேள்விகளுக்கு மக்களின் முக்கியமான கருத்துக்கள் மட்டுமே இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றிருப்பதால், சதவீதத்தின் கூட்டுத்தொகை 100-ஆக இருக்காது.

**நன்றி**

ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும்

மக்கள் ஆய்வு
லொயோலா கல்லூரி, சென்னை 600 034